**பலங்கொட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 13 ஆம் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் பலங்கொட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 திகதியன்று நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடங்கிய 13 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் சபையின் நிர்மாணம் மற்றும் மேன்படுத்துதலிற்காக செலவிடப்பட்ட ரூபா 3,234,433 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை அல்லாத சொத்துக்கள் நிர்மாணம் மற்றும் மேன்படுத்தல் மூலதனமாக்கப்பட வேண்டும். | ஜர்னல் குறிப்பொன்றினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டில் வேலைகள்/ களஞ்சிய ஆரம்ப இருப்பு ரூபா 16,830 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் ஆரம்ப மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்கினூடா சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டிய விளம்பரப் பலகை கட்டணம் ரூபா 11,760 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | ஜர்னல் குறிப்பொன்றினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிலையான வைப்பு வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்குரிய கணக்கீட்டு கொள்கைகளை இனங்கண்டிருக்கவில்லை. | அட்டுறு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருப்பதால் நிலையான வைப்பு வட்டி வருமானமும் அதன் அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | | | |
| (i) 24(1)(அ) மற்றும் (ஆ) உப பிரிவு | சபைக்கு சொந்தமான பாதைகள் மற்றும் ஒழுங்கைகளின் வரிபடங்கள் தயாரிக்க மற்றும் அவற்றின் பெயர்களை குறிப்பிட 1974 ஆண்டு முதல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கைமய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான பாதைகள் தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) 154(1) ஆம் பிரிவு | அதிகார எல்லையில் அமைந்துள்ள காணி ஒன்றை பிரித்து மொத்தம் 169 பர்சஸ் ஆன 06 காணித்துண்டுகள் விற்கப்பட்டிருந்த போதும், சபைக்கு அறவிட வேண்டிய ஒரு சதவீத வரியை செலுத்தாதது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்து வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரிக்கப்பட்டு விற்கப்பட்ட காணிகள் தொடர்பாக ஏதிர்காலத்தில் கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் | 2016 ஆண்டு விநியோகிக்கப்பட்ட 07 சுற்றாடல் பாதுகாப்பு | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய அனைத்து | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், |

| | | | | |
|---|---|---|---|---|
| | 47 தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களிற்கு இணங்க 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்தமானியில் ''இ'' பகுதியில் குறிப்பிடப்படும் கருத்திட்டங்கள் தொடர்பாக சுற்றால் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றை விநியோகிக்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு அதிகாரம் வழங்கல் மற்றும் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பான உபதேச விதியின் 3.3.1 மற்றும் 4.2 உப பிரிவுகள். | அனுமதிப்பத்திரங்களின் ஏற்புக் காலம் முடிவடைந்திருந்த போதும் அவற்றை மீள் புதுப்பிக்க மற்றும் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருந்த வேலைகள் தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொள்ள 2020 மார்ச் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனங்களிற்கும் உரிய நடைமுறைகளிற்கு அமைய அனுமதிப்பத்திரம் விநியோகிக்கக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேலைகள் தொடர்பாக கணிப்பீடு தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கிறேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(5) | 1992 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை விநியோகிக்கப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 204,535 ஆன 53 உபகட்டுநிதி 2020 மார்ச் வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1992 முதல் 2019 வரை உள்ள ரூபா 204,535 ஆன முற்பணத்தை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | காலாவதியான ரூபா 389,618 பெறுமதியான 08 வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ் வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01/2018 ஆஅம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை. | பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் செயலற்ற நிலையில் காணப்படும் கெப் வண்டியொன்று, 05 டெக்டர்கள், 04 டேலர்கள் மற்றும் | உரிமை தொடர்பாக காணப்படும் பிரச்சினையை தீர்த்து பராதீனம் செய்ய நடவடிக்கை | கெப் வண்டியின் உரிமை மாகாண பிரதான செயலாளரிற்கு உரியதுடன், பழுதடைந்த இயந்திர உபகரணங்களின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 22 டெக்டர் பகுதிகளை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | சட்ட ரீதியான உடமை பலங்கொட பிரதேச செயலாளரிற்கு உரியது. அவ் அலுவலர்களின் ஒறுமைபாடு மற்றும் ஆலோசனை படி எதிர்காத்தில் நடவடிக்கை எடப்பதாக அறிவிக்கிறேன். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2006 பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.4.1 வழிகாட்டி. | சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீது விலை மணு கோராது ரூபா 117,500 பெறுமதியான 10 கெனபி டென்ட் புடவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன . | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் விலை மணு கோரி கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,836,324 ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,220,843 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2018 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 1,938,381 | 1,482,741 | 1,628,657 | 162,195 | 1,723,425 | 1,328,345 | 1,306,730 | 269,540 |
| வாடகை | 4,332,200 | 4,592,730 | 4,356,488 | 294,820 | 3,389,750 | 2,691,398 | 2,679,638 | 74,343 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 558,500 | 619,241 | 722,991 | 98,750 | 507,500 | 643,416 | 620,916 | 141,100 |
| ஏனைய வருமானம் | 15,013,000 | 17,437,709 | 35,692,910 | 24,138,181 | 13,268,000 | 13,431,830 | 7,839,563 | 22,834,342 |
| | 21,842,081 | 24,132,421 | 42,401,046 | 24,693,946 | 18,888,675 | 18,094,989 | 12,446,847 | 23,319,325 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 02 இற்கும் 15 இற்குமிடைப்பட்ட வருட காலத்திலிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 47,721 ஆன ஏக்கர் வரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்றை செய்து கொண்டிருப்பதாகவும், அதன் பிரகாரம் எதிர்காலத்தில் குறித்த நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்ற உப விதிகள் விதிக்க வேண்டிய போதும் அவற்றில் 12 விடயங்களிற்கு 2020 மார்ச் வரையிலும் உப விதிகள் விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப விதிகளை விதித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த ஏனைய உப விதிகள் உருவாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### (ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் ஒன்று சேறும் திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு முறையான வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறையான திண்மக் கழிவுப் பொருள் முகாமைதுவ வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | உக்கலடையும் கழிவுப் பொருட்களை சேகரிக்க பொருத்தமான காணியொன்றை சபை அதிகார எல்லையில் பல இடங்களை பரீட்சித்ததுடன் பொருத்தமான காணியொன்றை இனங்காண தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 முதல் 2016 வரையான ஆண்டுகளிற்குரிய ரூபா 963,083 ஆன 15 வேலை கடன்கொடுனர் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன்கொடுனர் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இக் கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்த செயலாளர் பதவிக்காக பொது முகாமை தரம் 1 அலுவலர் ஒருவர் பதில் கடமை புரிவதற்காக 2017 ஆண்டு முதல் உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டிருந்தார். | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும. | இப் பதவி வெற்றிடமாக நிலவுவதாக ஆணையாளர் அலுவலகத்திற்கு ஆளணி அறிக்கையால் போன்று 2019 ஜனவரி 30 மற்றும் 2019 ஏப்ரல் 03 திகதிய கடிதம் மூலமும் அறிவித்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | வருமான பரிசோதகர், வேலை களநிர்வாக உத்தியோகத்தர், ஆயுர்வேத மருந்து கலவையாளர், சுடலை இயக்குனர், நூலக பொருப்பாளர், கனரக வாகன இயந்திர இயக்குனர், சுகாதார தொழிலாளி மற்றும் வேலை கள தொழிலாளி போன்ற பதவிகளில் 13 வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்காமையினால் குறித்த வேலைகளை மற்றும் செயற்பாடுகளை வினைதிறனாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்ற முடியாமலிருந்நது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும | இந்த பதவிகள் வெற்றிடங்களாக நிலவுவதாக வருடாந்த ஆளனி அறிக்கை ஊடாக பிரதான செயலாளருக்கு மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் , பிரதேச சபையினால் ஆட்சேர்க்க முடியுமான ஆரம்ப நிலை தொழிலாளர் பதவிக்காக தேர்தல்கள் நடவடிக்கைகள் முடிவடைந்தவுடனே ஊழியர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆண்டு ஏலவிற்பனைகளினால் பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 70.37 பர்சஸ் காணிக்கான உறுதியை பெற்றுக்கொண்டு உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரிமையை உறுதி செய்து கொள்ள வேண்டும். | இக் காணியின் உறுதியினை பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் புதிய மதிப்பீட்டின் மூலம் வீதவரி திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 2005 ஆண்டின் பின்னர் சொத்துக்கள் மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | வீதவரி அறவிட 05 வருடங்களிற்கு ஒரு முறை சொத்துக்கள் மதிப்பிடப்பட வேண்டும். | வீதவரி புதிய மதிப்பீடொன்றை செய்து தருமாறு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு பல முறை கடிதம் மூலம் கோரிய போதும், அதன் பிரகாரம் 2019 நவம்பர் மாதம் மதிப்பீட்டு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படதாக அறிவிக்கிறேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 61,711,139 ஆன சொத்துக்கள் 03 விடயங்களிற்குரிய நிலையான சொத்து பதிவேடு மற்றும் விரிவான அட்டவணையும், பெறுமதி ரூபா 45,576,005 ஆன கடன்படுனர் பதிவேடு மற்றும் கடன்படுனர் காலப் பகுப்பாய்வும் நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் கடன்படுனர் பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

#### 3.5.2 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 5,845,318 ஆன ஓட்ட நிலையில் உள்ள 02 டெக்டர்கள் மற்றும் கழிவகற்றும் ஓர் பவுசரும் 04 வருடங்களை விஞ்சிய காலப்பகுதிலிலிருந்து விளைவற்றதாக நிலவின. | சொத்துக்களை பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் கழிவுப் பொருட்களை சேகரிப்பதை ஆரம்பிக்கும் வரை இவ் வண்டியை தடுத்து வைத்துள்ளதாக அறிவிக்கிறேன். |